**செய்தி வெளியீடு எண்:550** **நாள்: 24.08.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (24.8.2017) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், முன்னீர்பள்ளம் கிராமத்தில் 32 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட இரயில்வே மேம்பாலத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், சென்னை, மதுரை, திண்டுக்கல், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 108 கோடியே 41 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 பாலங்கள் மற்றும் ஒரு இரயில்வே மேம்பாலத்தை திறந்து வைத்தார்கள்.

ஒரு மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளில் சாலைக் கட்டமைப்பு வசதி மிகமுக்கிய பங்கினை வகிக்கிறது. சாலைக் கட்டமைப்பு வசதிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தேவைக்கேற்ப மாநிலம் முழுவதும் புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகள் அமைத்தல், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல், போன்ற பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், திருச்செந்தூர் – பாளையங்கோட்டை – அம்பாசமுத்திரம் – தென்காசி – குற்றாலம் செங்கோட்டை சாலையில் 760 மீட்டர் நீளத்தில் 32 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட முன்னீர்பள்ளம் இருவழித்தட இரயில்வே மேம்பாலத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள். இப்புதிய மேம்பாலத்தின் மூலம், தென்காசி, குற்றாலம், அம்பாசமுத்திரம் மற்றும் செங்கோட்டை செல்லும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் பயன்பெறுவர்.

மேலும், சென்னை, வியாசர்பாடியில் இரயில்வே கீழ்பாலத்திற்கு அருகில் 80 கோடியே 68 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நான்கு வழித்தடமுள்ள இரயில்வே மேம்பாலத்தின் வலதுகர மேம்பாலம் சத்தியமூர்த்தி நகர் பகுதி மக்கள் பயன்பாட்டிற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 13.11.2015 அன்று திறந்து

வைக்கப்பட்டது. தற்பொழுது, எருக்கஞ்சேரி நெடுஞ்சாலையை இணைக்கும் வகையில் கட்டப்பட்டுள்ள நான்கு வழித்தடமுள்ள இரயில்வே மேம்பாலத்தின் இடது கரம்;

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு வட்டம், சக்கிமங்கலத்தில் வைகை ஆற்றின் குறுக்கே 18 கோடியே 17 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், ஒட்டநாகம்பட்டியில் அய்யனார் ஓடையின் குறுக்கே 1 கோடியே 99 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், இடையாநல்லூரில் பழவாற்றின் குறுக்கே 3 கோடியே 2 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், வைராவிகுளத்தில் மணிமுத்தாற்றின் குறுக்கே 4 கோடியே 55 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

என மொத்தம், 141 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 பாலங்கள் மற்றும் 2 இரயில்வே மேம்பாலங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி. வி.எம். ராஜலட்சுமி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர் திரு.ரெ.கோதண்டராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 24.8.2017**